Rediffusion/Edelman

Coverage Report: TCS IT Wiz – National Finals – Pondicherry

**Publication:** Viduthalai
**Date:** 18/12/2015
**Edition:** Pondicherry
**Page No.:** 5
**Headline:** St. Patrick Matric, Pondicherry finish as Runners Up at the National Finals of TCS IT Wiz 2015

## தகவல் தொழில்நுட்ப திறனுக்கான போட்டி

**புதுச்சேரி, டிச. 18-** மாணவர்கள் மத்தியில் தகவல் தொடர் மற்றும் தொழில்நுட்பத் திறன் பற்றிய புரிதலை ஏற்படுத்த டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் TCS நிறுவனம், 'டிசிஎஸ் அய்டி விஸ்' என்ற பெயரில் தேசிய வினாடிவினா போட்டி நடத்தியது.

சென்னை, கோவை, டில்லி, கொச்சி, இந்தூர், கொல்கத்தா, மும்பை, நாக்பூர், புனே உள்ளிட்ட 15 நகரங்களில் நடைபெற்ற இப்போட்டியில் 1806 பள்ளிகளைச் சேர்ந்த 17,000க்கும் மேற்பட்ட 8 முதல் 12ஆம் வகுப்பு மாணவர்கள் பங்கேற்றனர்.

இதில் 8 குழுக்கள் தேசிய அளவிலான இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது. அய்ந்து சுற்றுகளுக்கு பிறகு ஜேம்ஷட்பூரின் ராஜேந்திர வித்தியாலாயாவின் சவுதான்கலாம் மற்றும் அந்தன் அஸ்மத் ஆகியோர் பட்டத்தை வென்றனர்.

புதுச்சேரி புனித பேட்ரிக் பள்ளி மாணவன் ஜெயகிருஷ்ணா மற்றும் வெங்கட் சாய் ஆதர்ஷ் ஆகியோர் இரண்டாவது இடத்தை பிடித்தனர்.

இவர்களுக்கு டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் தலைமைச் செயல் அதிகாரி சந்திரசேகரன் பரிசுகளை வழங்கினார்.